Registered as a News Paper　　பக்கங்கள் 06　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 82　திருவள்ளுவர் ஆண்டு 2022　கார்த்திகை 09　(25 • 11 • 1991)　திங்கட்கிழமை　ஓசை: 280

## ஆசிரியர் கலாசாலை தேர்வு கொழும்பு செல்லதேவையில்லை

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தேர்வுக்கு இனிமேல் கொழும்பு போகத் தேவையில்லை. அடுத்த வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் தினங்கள் பற்றிப் பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள் மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படும். வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களிலும் ஆசிரிய (6ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரரின் பெற்றோரை கௌரவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இன்று 25ஆம் திகதி மாலையில் இருந்து 26ஆம் திகதி நள்ளிரவு வரை குறிப்பிடப்பட்ட சில இடங்களில் வைத்து இவர்களைக் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியிலுள்ள மூன்று நிலையங்களில் இந்தக் கௌரவிப்பு நடைபெறும். இக் கௌரவிப்பு நிகழ்ச்சிக்கு வரும் பெற்றோர்களை பராமரிப்பதில் மாணவ மாணவிகள் பெருமளவில் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

மாவீரர் வாரம் 1991

## மகளிர் பிரிவின் எழுச்சி விழா

(அரியாலை)

அரியாலை பூம்புகார் கிராமத்தில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் மாபெரும் எழுச்சி விழாவொன்று நடைபெறவுள்ளது.

அத்துடன் லெப். நிர்மலா ஞாபகார்த்த பாலர் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், தும்புத்தொழிலகம் என்பன ஆரம்பித்து வைக்கப் (3 ஆம் பக்கம் பார்க்க)

இலவசஇணைப்பு
1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக் கப்பட்டுள்ளது.

## மாவீரரைக் கௌரவிக்க மக்கள் பெருமளவில் அணிதிரள்வு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளான நேற்று மாவீரர்களை நினைவு படுத்திக் கௌரவிக்கும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் இடம் பெற்றன.

இந் நிகழ்ச்சிகளில் மாவீரரை கௌரவிக்க பெருமளவில் மக்கள் அணிதிரண்டனர்.

விடுதலைப் போராளிகளும் தமிழீழ காவல் துறையினரும் இணைந்து கோண்டாவில் காங்கேசன்துறைவீதி ஆகியவற்றில் அணிவகுப்பு நடாத்தினர்.

மாலை கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் கலை நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன. ஏராளமான மக்கள் குழுமி நின்று இக் (3ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

(கொடிகாமம்)

நேற்று முன்தினம் ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த வீரவேங்கைகளான புலேந்திரன் (கார்த்திகேசு சசிகரன், கரம்பைக்குறிச்சி, வரணி) தங்கன் (செல்வரத்தினம் கருணாகரன், சங்கத்தார்வயல், இயற்கச்சி) ஆகிய மாவீரர்களது புகழுடல்கள் நேற்றைய தினம் பிற்பகல் யா/வரணி மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப் (3 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் கொழும்பில் ‘சார்க்’ உறுப்புநாடுகள் இணக்கம்

சார்க் உச்சி மாநாட்டைக் கூடிய விரைவில் கொழும்பில் நடாத்த ஏழு நாடுகளும் இணங்கியுள்ளன. டிசம்பர் மாதப் பிற்பகுதியில் அல்லது ஜனவரி முற்பகுதியில் இம் மாநாட்டைக் கூட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இதுபற்றி அறிவித்த சிறிலங்கா வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் பேசுகையில் கொழும்பு உச்சிமாநாட்டிற்கான திகதிபற்றி மட்டுமே தீர்மானிக்கப்படவேண்டியிருப்பதாகக் கூறியுள்ளார்.

## மின்னொளியில் அணிவகுப்பு

மாவீரர் வார ஐந்தாம் நாள் நிகழ்ச்சியின் விசேட நிகழ்வாக இரவு எட்டுமணிக்கு கல்வியங்காட்டில் மின்னொளியில் அணிவகுப்பு ஒன்று

## கிராமசேவகர்சுட்டுக்கொலை கிழக்கில் ராணுவ அட்டூழியம்

## போராட்டத்தின் சாரதியாக தலைவர் பிரபா உள்ளார்

• புதுவை இரத்தினதுரை



தலைவர் பிரபாகரனின் காலத்தில் நாம் விடுதலை அடைய வேண்டும் என்று காலம் எமக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது. எமது போராட்டத்திற்கு சாரதியாக நின்று அவர் ஓட்டிச் செல்கிறார். நிச்சயம் நாம் வெல்வோம். எமது மக்கள்

கைலாசபதி அரங்கில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாம் அமைக்கவுள்ள தமிழீழம் சுதந்திர தேசமாகவே இருக்கும். சாதியும் பிரதேச வேறுபாடும் கொண்ட தமிழீழம் எமக்கு வேண்டாம்.

அச்சமில்லாத பிச்சையில்லாத தமிழீழத்தை அவாவி நிற்கின்றோம்.

மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இவர்கள் அனைவரும் [3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் புலிகளை மருதநாயகம் சந்தித்தார்

### சி.பி.ஜி. வழக்கறிஞர்

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள திருச்சி வழக்கறிஞர் மதுரநாயகத்தை பிணையில் இன்று 25ஆம் திகதி வழங்கப்படும்.

பிணை அனுமதிக்கக் கூடாதென வாதிட்ட சி.பி.ஐ.வழக்கறிஞர் "பத்மநாபா கொலை

குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

நிலையம், தும்புத்தொழிலகம் என்பன ஆரம்பித்து வைக்கப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரரைக் கௌரவிக்க மக்கள் பெருமளவில் அணிதிரள்வு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளான நேற்று மாவீரர்களை நினைவு படுத்திக் கௌரவிக்கும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் இடம் பெற்றன.

இந் நிகழ்ச்சிகளில் மாவீரரை கௌரவிக்க பெருமளவில் மக்கள் அணிதிரண்டனர்.

விடுதலைப் போராளிகளும் தமிழீழ காவல் துறையினரும் இணைந்து கோண்டாவில் காங்கேசன்துறைவீதி ஆகியவற்றில் அணிவகுப்பு நடாத்தினர்.

மாலை கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் கலை நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன. ஏராளமான மக்கள் குழுமி நின்று இக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

(கொடிகாமம்)

நேற்று முன்தினம் ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த வீரவேங்கைகளான புலேந்திரன் (கார்த்திகேசு சசிகரன், கரம்பைக்குறிச்சி, வரணி) தங்கன் (செல்வரத்தினம் கருணாகரன், சங்கத்தார்வயல், இயக்கச்சி) ஆகிய மாவீரர்களது புகழுடல்கள் நேற்றைய தினம் பிற்பகல் யா/வரணி மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் கொழும்பில் 'சார்க்' உறுப்புநாடுகள் இணக்கம்

சார்க் உச்சி மாநாட்டைக் கூடிய விரைவில் கொழும்பில் நடாத்த ஏழு நாடுகளும் இணங்கியுள்ளன. டிசம்பர் மாதப் பிற்பகுதியில் அல்லது ஜனவரி முற்பகுதியில் இம் மாநாட்டைக் கூட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இதுபற்றி அறிவித்த சிறிலங்கா வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் பேசுகையில் கொழும்பு உச்சிமாநாட்டிற்கான திகதிபற்றி மட்டுமே தீர்மானிக்கப்படவேண்டியிருப்பதாகக் கூறியுள்ளார்.

## மின்னொளியில் அணிவகுப்பு

மாவீரர் வார ஐந்தாம் நாள் நிகழ்ச்சியின் விசேட நிகழ்வாக இரவு எட்டுமணிக்கு கல்வியங்காட்டில் மின்னொளியில் அணிவகுப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

இவ் அணிவகுப்பை விடுதலைப்புலிகளும் காவல்துறையினரும் சேர்ந்து நடத்தவுள்ளதாக செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## கிராமசேவகர்சுட்டுக்கொலை கிழக்கில் ராணுவ அட்டூழியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமப் புறங்களில் தேடுதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் கிராமசேவையாளர் ஒருவரை சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கொக்கட்டிச் சோலை இராணுவ முகாமில் இருந்துபுறப்பட்ட சிறிலங்கா இராணுவ அணி

(3ஆம் பக்கம் பார்க்க)

## அளம்பில், செம்மலை குடியிருப்புக்கள் மீது விமானக்குண்டுவீச்சு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சில இடங்களில் சிறிலங்கா விமானப்படையினர் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலைமுதல்மாலை வரை நாயாறு, அளம்பில் ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகள்மீது சிறிலங்கா விமானப்படையினரது அவ்ரோ விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இத்தாக்குதல்களால் பொதுமக்களின் உடைமைகள் பல சேதமடைந்திருக்கின்றன.

## வீரவணக்கம்

### புனிதன்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் ஆறு ஒன்றைக் கடக்கும் சமயத்தில் நீரில் மூழ்கி புனிதன் (பாலசிங்கம் இரவிந்திரன்-மூதூர்) என்ற போராளி மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## எறிகணைத் தாக்கு

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம், காங்கேசன் துறைப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் கடந்த சில நாட்களாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் வெளிவந்தது யாருடைய பட்ஜெட்?

[கொழும்பு]

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டம் ஒரு லிங்கம் பட்ஜெட் என வர்ணித்தார் சுதந்திரக் கட்சியின் நிழல் நிதி மந்திரி எனக் கூறப்படும் திரு. தர்மசிறி சேனநாயக்கா. எதிர்க்கட்சியின் தரப்பில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய அவர்

(3ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இன்று 25ஆம் திகதி மாலையில் இருந்து 26ஆம் திகதி நள்ளிரவு வரை குறிப்பிடப்பட்ட சில இடங்களில் வைத்து இவர்களைக் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியிலுள்ள மூன்று நிலையங்களில் இந்தக் கௌரவிப்பு நடைபெறும். இக் கௌரவிப்பு நிகழ்ச்சிக்கு வரும் பெற்றோர்களை பராமரிப்பதில் மாணவ மாணவிகள் பெருமளவில் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

# போராட்டத்தின் சாரதியாக தலைவர் பிரபா உள்ளார்

• புதுவை இரத்தினதுரை



தலைவர் பிரபாகரனின் காலத்தில் நாம் விடுதலை அடைய வேண்டும் என்று காலம் எமக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது. எமது போராட்டத்திற்கு சாரதியாக நின்று அவர் ஓட்டிச் செல்கிறார். நிச்சயம் நாம் வெல்வோம். எமது மக்கள் சுதந்திரமடைவார்கள்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாம் அமைக்கவுள்ள தமிழீழம் சுதந்திர தேசமாகவே இருக்கும். சாதியும் பிரதேச வேறுபாடும் கொண்ட தமிழீழம் எமக்கு வேண்டாம்.

அச்சமில்லாத பிச்சையில்லாத தமிழீழத்தை அமைவிநிற்கின்றோம்.

மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இவர்கள் அனைவரும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் புலிகளை மருதநாயகம் சந்தித்தார்

### சி.பி.ஜி. வழக்கறிஞர்

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள திருச்சி வழக்கறிஞர் மதுரநாயகத்தை பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுமீதான தீர்ப்பு இன்று 25ஆம் திகதி வழங்கப் படும்.

பிணை அனுமதிக்கக் கூடாதென வாதிட்ட சி.பி.ஐ.வழக்கறிஞர் "பத்மநாபா கொலைக்கு முன்பும் பின்பும் மருதநா

[6 ஆம் பக்கம் பார்க்க]

# பல்கலைக்கழகக் கல்லூரிகள் மக்களை ஏமாற்றும் நடவடிக்கை

### பல்கலை. ஆசிரியர் ஒன்றியத் தலைவர்

(கொழும்பு)

பல்கலைக் கழகக் கல்லூரிகள் நாட்டிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளைப் போன்றவை. இக்கல்லூரிகளுக்குப் பல்கலைக்கழக அளவிற்கு அந்தஸ்து வழங்கவேண்டிய அவசியமும் இல்லை. பல்கலைக்கழக அந்தஸ்து வழங்குவதன்மூலம் பிரச்சினை அதிகரிக்கும். அரசு பல்கலைக் கழகக் கல்லூரிகளை அமைத்தமை வெறும் கண்துடைப்பாகும். மக்களை ஏமாற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

இவ்வாறு பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் றவித்ரா சில்வா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகக் கல்லூரிகளை அரசு ஏற்படுத்தியதன் காரணம் நாட்டில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டத்தையும், வேறு சிக்கல்களையும் தற்காலிகமாகச் சமாளிப்பதற்காகும். ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு தொழிலற்றோர் பிரச்சினை பாரிய பிரச்சினையாகி விடும் என்றும்,

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வசதி இல்லை என்பது பல்கலைக்கழகம் பட்டங்களின் பிழை என்பதால் அல்ல. அரசின் நடைமுறையினால்தான் இந்த வேலையில்லாப் பிரச்சினை என்றும்,

பல்கலைக்கழக கல்லூரிகள் வழங்கும் பட்டங்களினால் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்களின் மதிப்புக் குறைந்து விடும் என்றும் அவர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## அபாயகால கொடுப்பனவு உடன் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்களுக்கான அபாயகாலக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, ருகுணை ஆகிய பல்கலைக்கழக ஊழியர்களுக்கான 1988, 1989 ஆம் ஆண்டுகளுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இஸ்ரேல் தொடர்பாக மாற்றம் இல்லை

—சோலங்கி

(டில்லி)

இஸ்ரேலுடனான தனது கொள்கையில் எந்தவித மாற்றமும் இருக்காது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

தமது அமைச்சகத்துடன் இணைந்த பாராளுமன்ற ஆலோசனைச் சபை குழுக் கூட்டத்தில் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி மேற்காசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் உண்மையான முன்னேற்றத்தைப் பொறுத்து இந்திய-இஸ்ரேல் இருதரப்பு உறவுகளை மேலும் இயல்பாக்குவது சாத்தியமாகும் என்று குறிப்பிட்டார்.

இஸ்ரேலை இந்தியா அங்கீகரித்த நாளிலிருந்து அதனிடம் ராஜதந்திரத் தொடர்புகளுக்கான ஒரு சீரான கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வந்துள்ளது என்று சோலங்கி கூறினார்.

சோவியத் யூனியன் பற்றிப் பேசும் போது அங்கு ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்களைப் பற்றிப் புரிந்து கொள்ளவும், சோவியத் குடியரசுகளின் தலைவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளவுமே தான் அங்கு சென்றதாகத் தெரிவித்தார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
19.11.1972

வீரமரணம்
25.11.1990

### வீரவேங்கை மகாராஜா
(அருமைத்துரை இந்திரன்)

(காங்கேசன்துறை நேரடி மோதலில் வீரமரணம்)

அன்பு என்னும் சேவையிலே அரும்பி விட்ட
வீரவேங்கை
அள்ளி அணைக்கும் வேளையிலே அண்ணன் வழி
நின்டவனே
அந்நியர் நம் மண்ணை ஆக்கிரமிக்க வந்த வேளையிலே
அண்ணன் இட்ட அன்புக்கட்டளையை தலையாகக்
கொண்டவனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜா தமிழீழ
மண்புகழ் காத்தவருள்
நீயும் ஒருவனடா
அந்நியனை அடித்து விரட்டி ஓட வைத்தவன்
சாவிலே
அந்நியன் குண்டு மறைந்திருந்து தாக்கியதுவே உன்
நெஞ்சினிலே
நினைவினிலே நேர்த்தி வைத்து பிறந்த மகாராஜனே
தமிழீழம் மறந்திடுமோ உன் வீரம் மகாராஜனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜனே
நித்திய வேங்கை மண்ணைக் கொண்டவனே
எங்கள் மகாராஜனே
நித்திய இலக்காக நிலைத்தோனே மகாராஜனே
அன்னை தந்தை கண்ணீரோ மகாராஜாவே
ஆறாத் துயரில் மூழ்கிறோமே மகாராஜாவே
தம்பி தங்கை கண்ணீரோ மகாராஜவே
தனியாய் தவிக்கிறோம் மகாராஜாவே
உன் ஆன்ம சாந்திக்கு மகாராஜனே
ஆண்டவனை வேண்டுகிறோம் மகாராஜாவே

வெற்றிலைக்கேணி, முள்ளியான்,

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, உறவினர்

(R/1945)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விவசாயிகளே! உங்கள் ஊரிலே அனுபவம் மிக்க தொழில் வல்லுனர்களால் உற்பத்தி செய்யப்பட்ட மண்வெட்டி, கோடரி, கத்தி வகைகள், தெளி குவிகள் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். யாழ். காமாட்சி இரும்புத் தொழிற்சாலை நீர்வேலி

(B/3515)

### விற்பனைக்கு

விடுதலை உணர்வை சித்தரிக்கும் அழகிய படங்களுடன் உள்ளூர் காகித உற்பத்தியிலான நாட்காட்டிகள் விற்பனைக்கு உண்டு.

மொத்தமாகவோ சில்லறையாகவோ பெற்றுக்கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள் தமிழீழ ஆவண நிறுவனம் யாழ். மாவட்ட செயலகம், கோண்டாவில்.

(B/3514)

# சோவியத் ஸ்திரமற்ற நிலை அணுவை விட அபாயமானது

(மொஸ்கோ)

"மக்களின் விருப்பத்தை நாம் அங்கீகரித்திருக்காவிட்டால், ஜேர்மனியை ஒன்றிணைக்க உதவியிருக்காவிட்டால், கிழக்கு ஐரோப்பாவில் சுதந்திரத்தை ஏற்படுத்த முன்வராதிருந்தால் மூன்றாம் உலக யுத்தத்தின் விளிம்புக்கு நாம் வந்திருப்போம்" என்று சோவியத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷெவர்னாட்சே தெரிவித்துள்ளார்.

மீண்டும் இப்பதவியை ஏற்ற பின்னர் வானொலியில் உரையாற்றிய ஷெவர்னாட்சே "சோவியத்தின் ஸ்திரமற்ற தன்மை ஒரு உலக பிரச்சினையாகி இருக்கிறது. ஸ்திரமற்ற சோவியத் யூனியன் முழு உலகுக்கும் அணு ஆயுதங்களை விட அபாயகரமாக உள்ளது" என்றும் தெரிவித்துள்ளார்.

### ஷெவர் னாட்ஸே

சோவியத் யூனியனின் அரசியல் பொருளாதார சீர்குலைவுக்கு உள்ளாகும் என்ற மேற்கு நாடுகளின் அச்சத்தை தணிக்கும் வகையிலேயே இவர் மீண்டும் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர்வார எழுச்சிக்கூட்டம்

(கோப்பாய்)

நீர்வேலி தெற்கு சிவசிதம்பர பண்டிதர் சனசமூக நிலையத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு மாவீரர் வார எழுச்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

# மயிரிழையில் பெனாசீர் உயிர் தப்பினார்

## கார்மீது குண்டு தாக்குதல்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் ஏற்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் ஒன்றில் திருமதி பெனாசிர் பூட்டோ மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். எனினும் இச் சம்பவத்தில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டனர். திருமதி பெனாசிர் பூட்டோ வழமையாக செல்லும் பாதை வழியில் அவர் வழமையாகச் செல்லும் காருக்கு இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஆனால் திருமதி பெனாசிர் பூட்டோ அக்காரில் பயணம் செய்யாமையினால் உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்திற்கு ஆளும் கட்சியினரே காரணம் என்று பெனாசிர் பூட்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

# ஐ. நா. செயலாளர் பதவி; எகிப்திற்கு அமெரி. பரிசு

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவுடன் ஒத்துழைத்தமைக்காக எகிப்துக்கு வழங்கப்பட்ட பரிசே ஐக்கியநாடுகள் செயலாளர் பதவியாகும் என்று ஈராக் அதிபர் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் செயலாளர் பதவிக்கு எகிப்தின் பிரதிப் பிரதமர் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத

# குடியேற்றத்திற்கு எதிராக பிரான்ஸ் நடவடிக்கை

(பரிஸ்)

பிரான்சில் சட்டவிரோதமாகக் குடியேற முற்படும் நபர்களைக் கொண்டுவரும் விமான மற்றும் போக்குவரத்துச் சேவையாளர்களைத் தண்டிக்கும் சட்டத்தை பிரான்ஸ் அரசாங்கம் அமுல் படுத்தியுள்ளது.

இந்தச் சட்டம் பிரான்ஸ் அமைச்சரவைக்கு கொண்டுவரப்பட்ட போது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தகுந்த ஆதாரங்கள் இன்றி எவரையும் கொண்டுவரும் சேவையாளருக்கு 1800 டொலர் அபராதம் விதிக்கப்படும் என்றும்,

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 25



மகாராஜா

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுழிபுரத்தில் சவரோட்டி ஒட்டுப்போது தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட

சிவா (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் - மூளாய் மேற்கு)

சின்னச்சிவா (சந்தையா சிவானந்தன் - தொல்புரம் மேற்கு)


ஈஸ்வரன் (கந்தையா யோகேஸ்வரன் - தொல்புரம்)

சிவம் (சின்னத்தம்பு சிவராசா - தொல்புரம்)

புவி (தர்மரட்ணம் புவீந்திரன் - சுழிபுரம்)

தேவன் (விஷ்ணு தேவநாதன் - தொல்புரம் மத்தி)

1988 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் தொழி



## வீரவேங்கை மகாராஜா

### (அருமைத்துரை இந்திரன்)

(காங்கேசன்துறை நேரடி மோதலில் வீரமரணம்)

அன்பு என்னும் சேவையிலே அரும்பி விட்ட
வீரவேங்கை
அன்னி அணைக்கும் வேளையிலே அண்ணன் வழி
நின்றவனே
அந்நியர் நம் மண்ணை ஆக்கிரமிக்க வந்த வேளையிலே
அண்ணன் இட்ட அன்புக்கட்டளையை தலையாகக்
கொண்டவனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜா தமிழீழ
மண்புகழ் சாதனையாளருள்
நீயும் ஒருவனடா
அந்நியனை அடித்து விரட்டி ஓட வைத்தவன்
காங்கேசனிலே
அந்நியன் குண்டு மறைந்திருந்து தாக்கியதுவே உன்
நெஞ்சினிலே
நினைவினிலே நேர்த்தி வைத்து பிறந்த மகாராஜனே
தமிழீழம் மறந்திடுமோ உன் வீரம் மகாராஜனே
மறவர் குல மாணிக்கமே மகாராஜனே
நித்திய வேங்கை மண்ணைக் கொண்டவனே
எங்கள் மகாராஜனே
நித்திய நிலையாக நிலைத்தோனே மகாராஜனே
அன்னை தந்தை கண்ணீரோ மகாராஜாவே
ஆறாத் துயரில் மூழ்ரோமே மகாராஜாவே
தம்பி தங்கை கண்ணீரோ மகாராஜாவே
தனியாய் தவிக்கிறடா மகாராஜாவே
உன் ஆத்ம சாந்திக்கு மகாராஜாவே
ஆண்டவனை வேண்டுகிறோம் மகாராஜாவே

வெற்றிலைக்கேணி, முள்ளியான்,

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, உறவினர்

(R/1945)

## உயிர் தப்பினார்

### கார்மீது குண்டு தாக்குதல்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் ஏற்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் ஒன்றில் திருமதி பெனாசிர் பூட்டோ மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். எனினும் இச்சம்பவத்தில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டனர். திருமதி பெனாசிர் பூட்டோ வழமையாக செல்லும் பாதை யொன்றில் அவர் வழமையாக செல்லும் காருக்கு இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஆனால் திருமதி பெனாசிர் பூட்டோ அக்காரில் பயணம் செய்யாமையினால் உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவத்திற்கு ஆளும் கட்சியினரே காரணம் என்று பெனாசிர் பூட்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

## ஐ. நா. செயலாளர் பதவி; எகிப்திற்கு அமெரி. பரிசு

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவுடன் ஒத்துழைத்தமைக்காக எகிப்துக்கு வழங்கப்பட்ட பரிசே ஐக்கியநாடுகள் செயலாளர் பதவியாகும் என்று ஈராக் அதிபர் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் செயலாளர் பதவிக்கு எகிப்தின் பிரதிப் பிரதமர் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத

## குடியேற்றத்திற்கு எதிராக பிரான்ஸ் நடவடிக்கை

(பரிஸ்)

பிரான்சில் சட்ட விரோதமாகக் குடியேற முற்படும் நபர்களைக் கொண்டு வருகின்ற விமான மற்றும் போக்குவரத்துச் சேவையாளர்களைத் தண்டிக்கும் சட்டத்தை பிரான்ஸ் அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டம் பிரான்ஸ் அமைச்சரவைக்கு கொண்டு வரப்பட்ட போது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தகுந்த ஆதாரங்கள் இன்றி எவரையும் கொண்டு வரும் சேவையாளருக்கு 1800 டொலர் அபராதம் விதிக்கப்படும் என்றும்,

பிற நாட்டொருவர் தரைக்கப்பட்டால் அவரை மீண்டும் அவரது தாயகத்திற்கு கொண்டு சேர்க்கும் பொறுப்பு அந்த நபரைக்கொண்டு வந்த நிறுவனத்திற்கு உரியதாகும் என்றும் இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## கிராமங்களில் அமைப்பு வேலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் குழு விலகிய அதிருப்தியாளர் குழுத் தலைவர்கள் கிராமங்களில் கட்சிக் கிளைகளை அமைக்கும் ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிராமங்கள் தோறும் கொள்கை விளக்கப் பிரசாரங்களிலும் ஈடுபட்டுள்ளார்களாம்.

வழக்கில் தோல்வியைச் சந்தித்த கட்சியை விட்டு விலக்கப்பட்டுக் கஷ்டத்தில் கூடவிருகனாக புதிய கட்சியை ஆரம்பிப்பதற்கான பணியில் கிராமங்களில் அதிருப்தியாளர் ஈடுபட்டிருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

க. பொ. த. சாதாரண தரம்

## பொதுப் பரீட்சை

| திகதி | முற்பகல் | | பிற்பகல் | |
|---|---|---|---|---|
| 30-11-91 சனி | ஆங்கிலமொழி I<br>ஆங்கிலமொழி II | 08·30 - 09·30<br>09·30 - 11·30 | கணிதம் I<br>கணிதம் II | 12·30 - 01·30<br>01·30 - 04·30 |
| 01-12-91 ஞாயிறு | விஞ்ஞானம் I<br>விஞ்ஞானம் II | 08·00 - 09·00<br>09·00 - 12·00 | வரலாறும் சமூகக்கல்வியும் I<br>வரலாறும் சமூகக்கல்வியும் II | 01·00 - 02·00<br>02·00 - 05·00 |
| 07-12-91 சனி | தமிழ்மொழியும் இலக்கியமும் I<br>தமிழ்மொழியும் இலக்கியமும் II | 08·30 - 09·15<br>09·15 - 11·15 | தமிழ்மொழியும் இலக்கியமும் III | 12·30 - 02·30 |

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தமது அனுமதி அட்டைகளை 27-11-91 அன்று பெற்றுக்கொள்ளவும்.

### பரீட்சைப் பகுதி

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம். (B/3526)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 25



### மகாராஜா

1984 ஆம் ஆண்டு இத்தினத்தில் சுழிபுரத்தில் சவரோட்டி ஓட்டுப்போது தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட

சிவா (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன் - மூளாய் மேற்கு)

சின்னச்சிவா (சந்தையா சிவானந்தன் - தொல்புரம் மேற்கு)

ஈஸ்வரன் (சந்தையா யோகீஸ்வரன் - தொல்புரம்)

சிவம் (சிகாம்பு சிவராசா - தொல்புரம்)

புலி (தர்மரட்ணம் புலீந்திரன் - சுழிபுரம்)

தேவன் (விஷ்ணு தேவதாசன் - தொல்புரம் மத்தி)

1988 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் தொழில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் கடற்றொழிலாளி

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் எமது முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிர்பிரிந்த

லெப். ஜெயபால் (கணபதி மாடசாமி, கன்குளம், திருக்கோணமலை)

காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது காயமுற்று யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய

மகாராஜா (அருமைத்துரை இந்திரன் - நித்தியவெட்டை, முள்ளியான், வெற்றிலைக்கேணி)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினர் குறி வைத்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

லெப். லீனஸ் (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன் - கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3517)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

# 30 வருடங்கள் ஓடிக்கொண்டு இருக்கிறேன்

காக்கி உடையணிந்த இருவரின் அசைவற்ற உடல்களை தனது இருகைகளாலும் இன்னொரு காக்கி உடையணிந்த உருவம் தன்னால் முடிந்தளவு சிரமத்துடன் இழுத்துக்கொண்டு எமது பெரிய ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு சென்று கொண்டிருக்கிறது. மக்கள் அங்கும் இங்கும் செய்வதறியாது ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சில இளைஞர்கள் மட்டும் தமக்குள் ஏதோ இரகசியமாக பேசிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேரமோ மதிய போசனம் முடிந்தநேரம். அந்தப்பெரிய ஒழுங்கையின் ஒரு புறம் கடல், மறுபுறம் காங்கேசன்துறை பிரதான வீதி. எல்லோரும் ஓடிஒழித்துக் கொள்கிறார்கள். பருந்தைக் கண்டதும் தாயைத்தேடி ஓடும் கோழிக்குஞ்சுபோல நானும் அம்மாவைத்தேடி ஓடித்திரிந்தேன். எனது கால்களுக்கு நேரே வீட்டுக்குப்போகத்தெரியாது. எங்கெங்கோ திரிந்து தான் அம்மாவை சென்று அடைக்கலம் புகுந்தன. மிகவும் சந்தடி மிக்கது எனது கிராமம். அந்தப் பகல் பொழுதில் நடுச்சாமத்தில் காணும் மயான அமைதி நிலவியது நாய்கள் ஊளையிடும் சத்தத்தைத் தவிர நிசப்தமே நிலவியது.

நான் அம்மாவை அடைந்த சிறிது நேரத்தில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டியில் ஊதும் விசில் சத்தம் பலமாகக் கேட்டது. பெரிய வாகனங்கள் உறுமிக்கொண்டு வந்து எமது கிராமத்தை முற்றுகையிடுவதுபோன்ற உணர்வு. சற்றே நேரத்தில் கிராமத்தில் காட்டாறென புகுந்த காக்கி உடைகள் மக்களை இழுத்து அடித்து, உதைத்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தன. மக்கள் பீதியுற்று சிதறி ஓடினர். தங்கள் ஆவேசம் அடங்கியோ அடங்காமலோ என்னவோ அவர்கள் சிறிது நேரத்தில் யாருடையதோ பணிப்பின் பேரில் நகர்ந்து சென்றனர். அன்று ஊரில் பெரும் பீதி நிலவியது.

சிங்களச் சிப்பாய்களின் அட்காசம் அத்துடன் முடியாது என மக்கள் அன்றே புரிந்திருந்தனர். குடிமக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வீடுகளைவிட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தனர். எனக்கும் என் சகோதரர்களுக்கும் பயம். ஆனால் எங்கள் அம்மாவோ எமக்கு தைரியம் கூறி வைத்துக் கொண்டிருந்தார். அன்று இரவு அந்தச் சிங்களச் சிப்பாய்கள் எமது கிராமத்தையே தீமூட்டி முற்றாக நாசம் செய்வது என திட்டமிட்டிருந்தனராம்.

இருள் கௌவிக்கொண்டு வந்தது. ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியவில்லை. கடற்கரையில் மாலை நேரத்தில் கூடும் மக்கள் ஒருவரையும் காணவில்லை. சுறு சுறுப்பாக தமது மீன்பிடி உபகரணங்களை எடுத்துவந்து அதிகாலை தொழிலுக்கு போவதற்காக ஆயதப்படுத்தும் ஒருவரையும் அங்கு காணவில்லை. பயம் மிகுதியால் நாம் அழத் தொடங்கினோம். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அம்மா குரல் கொடுத்துப் பார்த்தார். என்ன பயன்? நாம் மயானத்தின் மத்தியில் தனியே இருப்பதான உணர்வு. அம்மா வீட்டுப் பொருள்களை எங்கெங்கோ ஒழித்து பவுத்திரப்படுத்தி வைப்பதுபோல உணர்ந்தேன். பயத்தின் மிகுதியால் எதையும் சரியாகப் புரிய முடியவில்லை.

இரவோடு இரவாக ஆலடியைக் கடந்து கம்பர் மலையில் உள்ள தலைவர் தங்கராசா என அழைக்கப்படும் என் குடும்பத்திற்கு தெரிந்த ஒருவர் வீட்டிற்கு சென்றடைந்தோம். மறுநாட்காலை திருமதி தங்கராசா அகதிகளாகிய எமக்கு அவித்து தந்த புட்டும் மையல் கிழங்குப் பொரியலும் இன்றும் என் நாவில் ஊறுகிறது. காலை நாம் எதிர்பார்த்ததுபோல் ஊரில் எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உள்ளூர்த் திருடர்கள் அன்றே தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர். எமது வீட்டிலும் உணவுப் பண்டங்கள் உட்பட துணிமணிகள் காணாமல் போயிருந்தன அம்மா நான் புறப்படும்பொழுது சில சாமான்களை பாதுகாப்புத் தேடி வைத்ததை அப்போது தான் நினைவு கூர்ந்தேன்.

கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி சிறிலங்கா அரசின் வானொலிஒலிபரப்பினால்வடமராட்சியை விட்டு மக்கள் சாரை சாரையாக கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தற்சமயம் மாவீரர் வீதியில் வதியும் நாம் 61ஆம் ஆண்டிலிருந்து ஓடி ஓடிக் களைத்துப்போய் அன்று ஓடுவதில்லை என்று முடிவெடுத்திருந்தோம் அன்று வல்வெட்டித்துறை மக்கள் மட்டுமல்ல முழு வடமராட்சி மக்களுமே வீடுகளை விட்டு தென்மராட்சிக்குப் போய்க் கொண்டிருந்தனர். அவசர அவசரமாக மக்கள் குடிபெயர்ந்தமைக்கு முக்கிய காரணம் இவ்வருடம் தை மாதம் 20ஆம் திகதி வல்லையில் நடந்த சம்பவமே. அன்று மக்களை வீடுகளை விட்டு வெளியேறுமாறு 24 மணி நேரத்திற்கு மேல் அவகாசம் கொடுத்த சிறிலங்கா விமானப்படை 2 மணி நேரத்திற்குள் தனது மூர்க்கமான தாக்குதலை தொடங்கி தொடர்ந்துநான்குநாட்களாக அராஜகம் புரிந்தது. இஞ்சித்தேனும் அரசபடைகளில் நம்பிக்கையற்ற மக்கள் குழந்தைகள், வயோதிபர் உட்பட அந்தச் சாமத்தில் எனது வீட்டு வீதியோரத்தால் நடக்க முடியாமல் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு போன காட்சி அன்று 61ஆம் ஆண்டு சில குடும்பங்கள் ஓடியதை ஞாபகமூட்டியது. இதுவும் ஏதோதான் போலும் என எனக்குள் எண்ணத் தோன்றுகிறது.

விடியற்காலை 3-30 மணி. ஊரே வெறிச்சோடிக்கிடந்தது. தான் ஊரைச் சுற்றி ஒரு வலம் வந்து பார்த்தேன். இதுவா வல்வெட்டித்துறை? ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

அதிகாலையில் நான் பிறந்த குறிச்சியான ஆதிகோவிலடிப் பக்கம் போய் அந்த மண்ணையும் பார்க்க என் உள்ளம் ஏவியது. அந்த மண்ணில்தான் முதல்முதலில் சிறிலங்கா சிப்பாய்களின் கோரக் கொலைகள் நிகழ்ந்தன. அமைதியான அந்த சூழலில் எங்கே, எப்போ குண்டுவீச்சு விமானங்கள் வருமோ என்ற சிந்தனையுடன் உலவி வந்த எனக்கு முப்பது வருடங்களுக்கு முன் நான் கண்ட காட்சி அப்படியே என் கண்முன் தோன்றியது. அந்த ஆதிகோவிலடி மண்ணில் அந்த வேளையில் என்னைப் போல ஒருசிலர் நடமாட்டத்தை நான் கண்டேன்.

எனக்கு அப்போ வயது பதினொன்று எனது வீடு கடலோரத்தில் இருந்தமையாலும் எமது கிராமத்தின் வறுமை நிலையாலும் எமது வீட்டில் கிணறு இல்லை. வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஆலடியில் குமரகுருவாடி என அழைக்கப்படும் வளவிலுள்ள துலாக் கிணற்றில் பெரியவர்கள் குளிக்கும்போது அவர்களின் தண்ணீரை ஏந்தி நானும் குளிப்பேன்.

நேரம் பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். காக்கி உடை அணிந் மூன்று பேர்கள் எமக்குப் புரியாத பாஷையில் ஏதேதோ கூறி தெருவில் நின்ற சனங்களையெல்லாம் துரத்தியவண்ணம் போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் எங்களைத் தாண்டியதும் நானும் றோட்டிலிருந்து கடற்கரையிலுள்ள எனது வீட்டிற்கு ஓடிச்சென்றேன். அங்கு எனது உடுப்பை மாற்றிக்கொண்டு நான் ஆதிகோவிலடிக் கடற்கரையில் அமைவிதுள்ள மீன்பிடிச் சங்கத்தால் அமைக்கப்பட்ட பந்தலுக்குப் போகவும் சிங்களச் சிப்பாய்கள் பிரதான வீதியில் இருந்து பெரிய ஒழுங்கை ஊடாக அங்கு வரவும் சரியாக இருந்தது.

கடற்றொழில் முடிந்து திரும்பியவர்கள் அந்தப் பந்தலில் தமது வலைகளைச் சீர் செய்து கொண்டும் ஒருசிலர் பொழுதுபோக்காக அன்றைய தொழிலைப்பற்றிப் பேசிக் கொண்டும் இருந்தனர். சிலர் களைப்பைப் போக்க பனையாகாரம் அருந்திவிட்டு வந்து அதில் சங்கி வம்பளந்தனர். இப்படிப் பலவிதமான இளையேர், முதியோர் கூடிய கூட்டத்தைச் சுற்றி எம்மைப் போன்ற சிறுவர்களும் விளையாடிக்கொண்டு இருந்த அந்த இடத்திற்கே சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர்.

எமது மண், எமது பந்தல், எமது ஊர் இதில் எவருக்கும் வேறு கருத்து இருக்கவில்லை. தமது வீடுபோலத்தான் சாதாரணமாக அதை எல்லோரும் பாவித்து வந்தனர். சீருடையில் வந்த சிப்பாய்கள் சிங்களத்தில் ஏதோ கூறி அங்குள்ளவர்களை துரத்தினர், அடித்து துன்புறுத்தவும் தொடங்கினார்கள். இளங்கன்று பயமறியாது என்பார்களே அந்த நிலையோ? எமது சொந்த மண்ணில் இருந்து எம்மை அடித்துத் துரத்த இவர்கள் யார்? என்ற ஆவேசமோ தெரியாது. அக்கூட்டத்தில் இருந்த ஒரு சில இளைஞர்களுடைய கண்கள் பேசின. மறுகணம் சிங்களச் சிப்பாய்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பஞ்சலிங்கம் ஒரு சிப்பாயை அப்படியே தூக்கி நிலத்தில் போட்டு அடித்துப் பந்தாடினார். அந்த இடத்தில் அழகையா, இராமசாமி சகோதரர்கள் மற்றும் சோதிலிங்கம் ஆகியவர்களை இச் சண்டையில் ஈடுபட்டதை என்னால் இன்றும் ஞாபகப் படுத்த முடிகிறது.

சண்டை தொடங்கியதும் பாதுகாப்புத்தேடி பெரிய ஒழுங்கையால் ஓடிச்சென்று பாலசிங்கம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து வேலியால் பார்த்துக் கொண்டிருந்தேன். மடக்கிப்பிடிக்கப்பட்ட மூன்று சிப்பாய்களுள் ஒருவன் துப்பாக்கியுடன் தப்பிவந்து நான் நின்றவீட்டுவேலியுடன் நின்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தான். அந்த வீட்டிற்கு கிழக்குப்புறமாக இருக்கும் ஒரு சிறு ஒழுங்கையால் வந்த மார்க்கண்டு பெரிய மீன்களைத் தூக்கி வள்ளத்தில் போடும் கொழுவியால் வேட்டுக்களைத் தீர்க்கும் சிப்பாயின் பின்புறத்தால் வந்து கழுத்துக்குக் குறி வைத்து கொழுவி இழுத்தார். அந்தோ பரிதாபம் அவர் குறி தவறிற்று. சிப்பாயின் குறி தவறவில்லை. அவன் திரும்பி இவரைச் சுட்டுவிட்டான். குண்டு அவரது வாய்க்குள் புகுந்து அலகால் வெளியில் வந்தது.

சிப்பாய் திரும்பவும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று குற்றுயிராக இருந்த இரத்தம் தோய்ந்த இரு சிப்பாய்களையும் தனது இருகரங்களாலும் அணைத்தபடி சொர சொர என இழுத்துக்கொண்டு பிரதான வீதிக்கு வந்து விசில் அடித்து தனது அபாயத்தை தூரத்தில் இருக்கும் ஏனைய சிப்பாய்களுக்கு தெரிய படுத்தினான். சிறிது நேரத்தில் பேரிரைச்சலுடன் வாகனங்கள் நிறைய சிப்பாய்கள் வந்து ஊரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

நம்மவரிடம் அனுப்பப்பட்ட சிப்பாய்களில் ஒருவனை இராமசாமி ஆட்டுக்கு சீக்காய் சீவிக்கொண்டிருந்த பாளைக் கத்தியால் கண்டபடி வெட்டியதால் அவனுடைய மூக்கும் காதும் அறுக்கப்பட்டு அவன் அந்த இடத்திலேயே இறந்ததாக பின்னர்தான் அறிந்தேன். மற்றைய சிப்பாய் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்தான். இச்சண்டையில் அழகையா என்பவருக்குப் பட்ட துப்பாக்கிரவை அவரது தோள்ப்பட்டைக்குக் கீழ் கமக்கட்டில் காயத்தை ஏற்படுத்தியது. காயப்பட்ட

## ஆதிகோவிலடி ஜெயம்

நம் இருவரும் உயிர் பிழைத்துக் கொண்டனர். மார்க்கண்டு என்பவர் பின்னர் இயற்கை மரணம் அடைந்தார்.

இதை எழுதி முடிக்கும் தறுவாயில் சோதிலிங்கம் என்பவரை நேரில் கண்டு இது பற்றிக் கேட்டபோது பின்வருமாறு விபரித்தார். "டே மச்சான் அது சத்தியாக்கிரக காலத்திலே நாங்கள் கறுத்கொடி கட்டி எமது எதிர்ப்புக்களை சிங்கள அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினோம்.

அப்பொழுதுதான் இவர்கள் வந்து கறுத்தக் கொடிகளை எங்களைக்கொண்டு அறுப்பித்து பின்னர் எங்களை ஊருக்குள் புகுந்து இங்கு அட்டகாசம் புரிந்தவர்கள். அவன் பஞ்சலிங்கம் கட்டிப்பிடிக்க நான் ஒருவனுக்கு இரண்டு கல்லுகளால் தலையிலும்முகத்திலும் குத்தினேன். அவன் இரத்தம் ஓடிச் செத்துப் போக எனக்கு மனம் ஒரு மாதிரிப் போச்சு செத்தவனுடைய துவக்கை இழுத்துப் பார்த்தன். அது நல்லா கொழுவுப்பட்டு இருந்ததால் வர மாட்டன் என்றிருந்தது. ஆனால் இராமசாமி பாளைக் கத்தியால் அவனின் பெல்டை வெட்டித் துவக்கை எடுத்து முறித்துப்போட்டு அதுக்குரிய குண்டுகளையும் கொண்டு போய் கடலுக்குள் எறிந்து விட்டார். மச்சான் இவர்கள் இப்ப வந்தாலும் நான் எதிர்த்துப் போராடத் தயார் என்று அன்று நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தினார்.

சிறிலங்கா ஆதிக்க வெறியர் முதன் முதலில் எம் மண்ணில் காலடி எடுத்து வைத்த அன்றே தகுந்த பாடம் படிப்பித்த இந்த மண்ணின் அந்த மைந்தர்களும் இம்மாவீரர் வாரத்தில் நினைவு கூறப்பட வேண்டியவர்களே.

# 450 அரசதோட்டங்கள் 22 கம்பனிகளிடம்

அரச தோட்டங்களுக்குச் சொந்தமான 450 தோட்டங்கள் 22 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கும் சொந்தமான மேற்படி தோட்டங்களே இவ்வாறு தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இத்தீர்மானம் கடந்த 12-ம் திகதி பெருந்தோட்டத்துறை அமைச்சில் பெருந்தோட்டத்துறை மறுசீரமைப்பு குழுவுக்கும் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் பின் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டுக் கமிட்டியின் கோரிக்கைகளை செவிமடுத்த மறுசீரமைப்பு குழுத்தலைவர் ஆர். பாஸ்கரலிங்கம் கருத்து தெரிவிக்கையில் தொழிலாளர்களின் குடியிருப்புகள், சேமநலன்கள், சுகாதாரம் போன்றவைகள் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருந்து வரும் என்றும் இதற்கென்று தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி அபிவிருத்தி திட்டங்களையும் சூழல் மாற்றத்திற்கேற்றவாறு அமைப்பதில் ஈடுபட்டுவரும் என்றார்.

தோட்டத்துறை அமைச்சர் ருபா கருணா திலகா கருத்து தெரிவிக்கையில் கண்டி, மாத்தளைப்பகுதிகளில் இலாபம் தரக்கூடிய 55 தோட்டங்கள் தொடர்ந்தும் அரசுடமையாக இருக்கும். அத்துடன் கம்பனிகள் பொறுப்பேற்றபின் தோட்டங்கள் இலாபமீட்டினால் இலாபத்தில் 10 வீதம் ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்றும் வழமையான அடிப்படைச் சலுகைகளும் உரிமைகளும் தொடர்ந்திருக்கும்.

எனவே தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதோ, மக்களை பாதிப்படுத்துவதோ அரசாங்கத்தின் கொள்கை அல்ல என்றும் தெரிவித்தார்.

மேற்படி விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கூட்டு ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்பட உள்ளது என்றும் தெரிவித்தார்.

# துருக்கியில், வளைகுடா ஆயுதக் கண்காட்சி

[அங்காரா]

வளைகுடா யுத்தத்தில் அமெரிக்க நேச நாடுகளின் வெற்றிக்கு வழிவகுத்த ஆயுதங்கள் துருக்கியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இருபத்தி நான்கு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்த சர்வதேச ஆயுதக்கண்காட்சியில் பங்குபற்றியதாகவும், சவுதி அரேபியாவிலும் இஸ்ரேலிலும் ஈராக்கின் 'ஸ்கட்' ஏவுகணைகளை நொருக்கி வீழ்த்திய பெற்றியாட் ஏவுகணைகள் கண்காட்சியில் நடுநாயகமாக இருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராஜதந்திரிகளும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் இக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

# இடைக்கால உத்தரவை கசற்றில் அறி.வேண்டாம்

காவிரி நீர் பங்கீடு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசகசற்றில் அறிவிக்க வேண்டாம் என்று கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா இந்தியப் பிரதமர் பி.வி.நரசிமமராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து பங்காரப்பா அனைத்துக்கட்சி பிரதிநிதிக் குழுக்களுடன் பிரதமரைச் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்தார்.

## ஊரடங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று காலை எட்டு மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாக கூட்டுப் படைகளின் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது. ஆனால் வவுனியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் வாரம் - 1991

## ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

மாவீரர் தின நிகழ்வுகள் இன்று ஐந்தாம் நாளாக தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன.

இன்றைய மாவீரர் தின நிகழ்வில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் இன்று மாலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும் மாவீரர் நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

வலிகாமம் - தெல்லிப்பளை வட்டம் அளவெட்டி வடக்கு அம்மன் கோவிலடியில் வி.பு.ம.மு பிரமுகர்களான ஜலகுமார், நெடுங்கீரன், ஜெயா ஆகியோரும், சண்டிலிப்பாய் வட்டம் இளவாலை சென்ற் ஹென்றிஸ் பாடசாலையில் வி.பு.ம.மு பிரமுகர்களான தேவர், இளம்பருதி, வெண்ணிலா ஆகியோரும், நல்லூர் வட்டம் சுந்தரிமடம் சைவப்பிரகாச வித்தியாலயம் வி.பு.ம.மு பிரமுகர்களான வாஞ்சிபாலன் சண்முகநாதபிள்ளை, இளவழகி உரை நிகழ்வுகளும் மூளாய் கலாலயம் நாட்டிய நாடகம், தேவர் அண்ணாவின் சந்தனக்காடுகள் நாடகம், மலரும் தமிழீழம், வீரத்தாய் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

தென்மராட்சி பளை மாசார் பாடசாலையில் வி.பு.ம.மு பிரமுகர்களான மூர்த்தி தனபாலசிங்கம், நிலா ஆகியோரும், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வி.பு.ம.மு பிரமுகர்களான இனேஷ், நாவண்ணன் தமிழிச்சி, சாம்பவி ஆகியோரின் உரை நிகழ்வுகளும், தென்மராட்சி உலக நாடகனின் இசை நாடகம் மலரும் தமிழீழம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

வடமராட்சி - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் வி.பு.ம.மு பிரமுகர்களான அரசண்ணா கலையரசன், இளவேயினி, சந்திரிக்கா ஆகியோரின் உரை நிகழ்வுகளும், ''எப்பொழுது விடியும்'' என்ற கலை நிகழ்வும் இடம்பெறும்.

தீவகம்-(இடம்பெயர்ந்தோர் முகாம்) யாழ். மத்திய கல்லூரி வித்தியாலயத்தில் வி.பு.ம.மு பிரமுகர்களான யோகி, சலீம் சக்தி ஆகியோரின் உரை நிகழ்வும், அரியாலை சுபாஜினி குழுவினரின் நாட்டிய நாடகமும் இடம் பெறும்.

### மாவீரர் தினத்தையொட்டி ஆத்ம சாந்தி பிரார்த்தனை

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 27-11-91 புதன்கிழமையன்று காலை 9-00 மணி முதல் நண்பகல் 12 மணிவரை ''ஆத்மசாந்தி'' பிரார்த்தனை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து இந்து சமய நிறுவனங்களும், மக்களும் இவ் ''ஆத்மசாந்தி'' பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அருளாணை பிறப்பித்துள்ளார்.

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் பிரார்த்தனையில் கலந்துகொள்வதில் சிரமமேதும் இருப்பின் தூர இடங்களிலுள்ள இந்து சமய நிறுவனங்களும், மக்களும் ஆங்காங்கே இத்தகைய ஆத்மசாந்தி பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்து மாவீரர்களின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அருளாணை பிறப்பித்துள்ளார்கள்.

### கூட்டுறவாளர் நடத்தும் மாவீரர் நாள் நிகழ்ச்சி

யாழ். மாவட்ட கூட்டுறவாளர் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் இன்று ஐந்தாம் நாள் வடமராட்சி கோட்டம் நடாத்தவுள்ளது.

உடுப்பிட்டி ப.நோ.கூ சங்க முன்றலில் ப. கிருஷ்ணபிள்ளை தலைமையில் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இக் கூட்டத்தில் மங்கள விளக்கேற்றல், தேசியக்கொடி ஏற்றல், தலைமையுரை ஆகியவற்றைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் உரையும் குழுப்பாடல் 'லெப்டினன்ட் சங்கர்' என்ற வில்லிசை போன்ற கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

### யாழ். பல்கலையில் மாவீரர் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்வாரவிசேட நிகழ்ச்சி இன்று காலை 9.00 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பெருவிமரிசையாக நடைபெற விருக்கின்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் மாவீரர் சிறப்புரைகள் விடுதலைப்புலிகள் பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களின் மாவீரர் இசைச் சிறப்புரை என்பவற்றோடு பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களினால் மாவீரர் நினைவுப் பேருரை 'மார்க்சிசம் தோற்றுவிட்டதா' என்னும் தலைப்பினலும் உரை இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வாக பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. தமிழீழத்தின் அனைவரையும் வருக வருக என பல்கலைக்கழக மாணவர்கள் அன்புடன் அழைக்கின்றார்கள்.

### 30 தனியார் தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டன

(கண்டி)

தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாகத் தனியார் துறையைச் சேர்ந்த முப்பது தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தேயிலை விலையில் தற்போதுள்ள மந்த நிலை தொடருமானால் மேலும் பல தேயிலைத் தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்படும் என்று தோட்டக் கைத்தொழில் அமைச்சின் முதுநிலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருவதன் விளைவாக 14,5000 சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

### அடிமைச் சேற்றினிலே உழன்றிட நாம் மாடா?

சங்கிலியன் ஆண்டதமிழ் மண்ணின்
சரித்திரத்தை மறைத்து விட முனையும்
சிங்களப் பேரினவாத ஆட்சிச்
செயல் கண்டு முடங்கிடல் நன்றாமோ?
எங்களது படைநாளை வெல்லும்
ஏழுலகும் அதன் புகழைப் பாடும்
செங்களத்தில் ஆடிடவா தோழா அடிமை
சேற்றினிலே உழன்றிட நாம் மாடா?

செங்கதிரின் ஒளியொன்று வீசும் நம்
தேசத்தின் இருட்போர்வை விலகும்
எங்களது வயல்களில் நெல்மணிகள்
ஏகாந்தமாய் வளைந்து ஆடும்
பொங்கியெழும் கடல் நீரைக் கிழித்துப்
புதுக்கீதம் மீனினங்கள் பாடும்
செந்தமிழின் நிலம் காக்க உந்தன்
தேகத்தை ஈய்திட நீ வாடா!

நெடுந்தீவு லக்ஸ்மன்

### இனப்பிரச்சினை முடிவிற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது முக்கியம்

- தேவராஜ்

''வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு கூடுதலான நிதியை ஒதுக்குவதைக் கண்டிக்கும் பலர் புலிகளுடன் பேசமுயற்சிப்பதையும் கண்டிக்கின்றனர். இது ஒன்றுக்கொன்று முரணான பேச்சுக்களாகும்''

இவ்வாறு பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பேசிய ராஜாங்க அமைச்சர் தேவராஜ் தெரிவித்தார் நாட்டில் இன்று நிலவும் இனப்பிரச்சினையை எவ்வாறாயினும் தீர்க்க நாம் முயலவேண்டும் இதன் மூலம் தான் நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்ல முடியும்.

நம்பிக்கையின் அடிப்படையில் தான் அமைச்சர் ரொன்டமான் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டிருக்கிறார். இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர நாம் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவது முக்கியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 'ஊழியன்' வெளியாகியது

வர்த்தக ஊழியர் சங்கத்தினரால் வெளியிடப்படும் 'ஊழியன்' முதலாவது மாத வெளியீடு நேற்று வெளியாகியது.

### தகவல் விளக்கக் கூட்டம்

1990, 91 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சைகள் தொடர்பான தகவல் விளக்கக் கூட்டம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வரும் 28 ஆம் திகதி காலை 9-00 மணியளவில் நடைபெறவுள்ளது. கோப்பாய் கலாசாலைப் பரீட்சார்த்திகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அதிபர் கேட்டுள்ளார்.

## சர்வதேச சட்டத்தைபாதுகாக்குமாறு அதிமேற்றிராணியார் கோரிக்கை

[லண்டன்]

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் உண்மையாகப் புகலிடம் கோருவோரைப் பாதுகாக்கும் நியதியைக் கடைப்பிடியுங்கள் என பிரித்தானிய கென்டபரி அதிமேற்றிராணியார் ஜோர்ஜ் கேரியும், வெஸ்ட்மினிஸ்டர் அதிமேற்றிராணியார் பெசில் ஹியுமும் கூட்டாக பிரித்தானிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக பிரித்தானிய பாராளுமன்றத்தில் புகலிடம் கோருவோர் மீதான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை தெரிந்ததே.

இதனை எதிர்த்தே கென்டபரி அதிமேற்றிராணியாரும், வெஸ்ட்மினிஸ்டர் அதிமேற்றிராணியாரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதே நேரம் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி அடுத்த வருடம் பொதுத் தேர்தலில் செல்வாக்குப் பெறுவதற்கு இன அடிப்படையிலான ஒரு சட்டமூலத்தை ஆளும் கட்சி முன்வைத்துள்ளது என்றும், புது சட்டத்தின் கீழ் உண்மையாக புகலிடம் கோருவோர் திருப்பி அனுப்பப்படுவர் என்றும், அதனால் அவர்கள் சித்திரவதை, மரண தண்டனைக்கு ஆளாவார் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினாலும் பிரபுக்கள் சபையில் திருத்தத்திற்கு உள்ளாகும் என அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

### அணுஆயுத சக்தி குறித்து அமெரி. - பாக் பேச்சு

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானுக்கு சீனா அணுசக்தி ஏவுகணைகளை விநியோகித்தது உட்பட மற்றும் அணு ஆயுதங்கள் பற்றிய தகராறு தொடர்பாக பேச்சுவார்த்தைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றன. அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உதவிக் காரியதரிசி இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

அணு ஆயுதத் தயாரிப்பு தொடர்பான முரண்பாட்டால் ஒரு வருடத்திற்கு மேலாக அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு சகல உதவிகளையும் நிறுத்திவைத்துள்ளது. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாக தெரிவிக்கப்படும் புகார்களை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

### 60 மாணவர்களுக்கு 18 ஆசிரியர்கள்

(பதுளை)

ஊவாமாகாண பாடசாலை யொன்றில் 60 மாணவர்களுக்கு 18 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இவர்களில் ஒருவர் பட்டதாரி ஆசிரியர் ஆவர். இவருக்கு கடமை நேரம் நாளொன்றுக்கு 35 நிமிடங்கள் மட்டுமே. இத்தகவலை ஊவா மாகாண கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

### டொராண்டோவில் பெண் மேயர்

கனடாவின் மிகப் பெரும் நகரமான டொராண்டோவின் மேயராக முதல் தடவையாக பெண் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

### நினைவஞ்சலி



லெப். கணேஸ்
(தில்லை-டொமினிக் சாந்தன்)
பிறப்பு: 5 - 8 - 1964
இறப்பு: 21 - 11 - 1986



2ஆம் லெப். தினேஸ்
(தில்லை-அன்ரன் தினேஸ்)
பிறப்பு: 13 - 6 - 1969
இறப்பு: 27 - 11 - 1989

'சாந்தினேஸ்'
சில்லாலை,
புதுக்குடியிருப்பு.

உங்கள் பணியைத் தொடரும்
தாய், தந்தை, மைத்துனர்,
சகோதரிகள், மருமகன் கிறேஸி.

(B/ 3486)

திருமலை வரும்

# அகதிகளை தங்கவைக்க ஏற்பாடு பூர்த்தியாம்

(திருக்கோணமலை)

தமிழகத்திலிருந்து திருக்கோணமலைக்கு வரும் அகதிகளை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக திருக்கோணமலை உதவி அரசாங்க அதிபர் ஏ. சுப்பிரமணிய சர்மா தெரிவித்துள்ளார்.

இங்கு வரும் அகதிகள் ஹோட்டல் ஒளப் ஏசியா, ஹோட்டல் சிலோன் ஆகியவற்றில் தற்காலிகமாக தங்க விடப்படுவதோடு ஒரு வார காலத்திற்கு சமைத்த உணவும் வழங்கப்படவுள்ளது.

மேலும் நிவாரண உதவியாக பணம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் ஹோட்டல்களில் தங்கியிருக்கும் அகதிகள் சொந்த வீடுகளுக்கு திரும்ப விரும்பும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவர் என்றும் ஏனையோர் தற்காலிகமாக தங்கியிருப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் மாநாடு

(பேர்லின்)

ஐரோப்பிய தமிழ் மாநாடு இந்த மாதம் 29 ஆம் திகதி முதல் டிசம்பர் 1 ஆம் திகதி வரை பேர்லினில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

''புலம் பெயர் வாழ்வும், இலக்கியமும்'' என்பது பற்றியே முக்கியமாக இங்கு ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூரண பாதுகாப்பு ராஜீவிற்கு வழங்கவில்லை

## காங்கிரஸ் கமிட்டி தெரிவிப்பு

(டில்லி)

''எவ்வளவோ கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தும் கூட முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு முழு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை'' என்று அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கமிட்டி ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை செய்து வரும் வர்மா விசாரணைக் கமிஷனிடம் தெரிவித்துள்ளது.

பயங்கரமான பாதுகாப்புக் குறைபாடுகளாலும் நன்கு திட்டமிட்டு தீட்டப்பட்ட சதியினாலும் தான் சிறிபெரும்புதூரில் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டார் என்று வர்மாக் கமிஷனிடம் அளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளது.

# சைக்கிள் திருட்டு

(குருநகர்)

வீட்டுத் தாழ்வாரத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

குருநகர் பவுண்சார்மேல் வீதி சிவராசா ஆசிரியர் இல்லத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த லுமாலா சிறுவர் சைக்கிள், ஹீரோ பெண்கள் சைக்கிள் ஆகியனவே திருட்டுப் போனவையாகும். (21)

# எழுதுநர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள்

(நல்லூர்)

வட-கிழக்கு மாகாண அமைச்சிலும், வட-கிழக்கு மாகாண திணைக்களங்களிலுமுள்ள எழுதுநர்களுக்கும், எழுதுநர் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடாத்தவுள்ளதாக வட-கிழக்கு மாகாண செயலகப் பிரிவு சகல திணைக்களங்களுக்கும் தெரிவித்துள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள உள்ளவர்களின் பெயர் விபரங்களை திருக்கோணமலை வட-கிழக்கு மாகாண சபையின் பயிற்சிப் பிரிவுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அலுவலக நடைமுறை நிர்வாகப் பிரமாணங்கள், நிதிப் பிரமாணங்கள் என்பவற்றிலேயே பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அப்பாயகால

கான மேற்படி கொடுப்பனவுகளை இடைநிறுத்தும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் அறிவித்திருக்கிறது.

திறைசேரிக்குத்தற்பொழுது ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நிதி கிடைக்காமையாலேயே மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகம் மேற்படி காலப்பகுதிக்கான கொடுப்பனவுகளின் பெரும் பகுதி வழங்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ

ஆசிரியர்

கலாசாலை அனுமதிக்கான நேர்முகப்பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில்

பகம் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளார். அவர் விடுதலைப் புலிகளை சந்தித்துள்ளார். இதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன. தமிழ்த் தேசியமீட்புப்படை என்ற புலிகள் ஆதரவு அமைப்பைச் சேர்ந்த செல்லமுத்து, சண்முகம் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது அவர்களுடன் சேர்ந்து மருதநாயகம் படம் எடுத்துள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடனும் மருதநாயகம் படம் எடுத்துள்ளார். ஆதாரமாக இதற்கு 40 படங்கள் பொலிசாரிடம் இருக்கின்றன. திருச்சி தில்லை நகரில் சாந்தன், கிருபன், விக்கி ஆகியோர் தங்குவதற்கு வீடு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். பத்மநாபாவைகொலை செய்ய தில்லை நகரிலுள்ள அந்த வீட்டில்தான் சதி உருவாகியுள்ளது. பத்மநாபா கொலையை முடித்து விட்டு கொலையாளிகள் அதே வீட்டில் தங்கியிருந்துவிட்டு அங்கு இருந்து யாழ்ப்பாணம் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இரத்தினக்கல் கடத்தல்

# வயிற்றுக்குள் இருந்து 57 கற்கள் மீட்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு இரத்தினக் கற்களை கடத்திச் செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் பிடிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் கடத்திச்சென்றவர் தமது வயிற்றிலேயே இரத்தினக் கற்களை கடத்திச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இவரது வயிற்றுக்குள் இருந்து 57 இரத்தினக் கற்களை மீட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

எறிகணை

பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். இதனால் பொது மக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

# மேலதிக செயலர்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் நிலைமைகளை மேலும் வழமை நிலைமைக்குக் கொண்டுவரும் மற்றொரு நடவடிக்கையாக வட-கிழக்கு மாகாண சபையின் மேலதிக செயலாளராக வவுனியா அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருத்தம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பிற்காகத் தெரிவுசெய்யப்பட்டதாக வெளிவந்த பட்டியலில் சில தவறுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் திருத்தி கீழே பிரசுரிக்கின்றோம்

| சரியான இலக்கம் | தவறாக அச்சிடப்பட்டது |
|---|---|
| சங்கானை உ.அ.அ. பிரிவு வைகாசி-1991 யா/ச/925 | யா/ச/95 |
| சாவகச்சேரி உ.அ.அ. பிரிவு ஆடி - 1991 1. யா/சா/978 | யா/சா/678 |
| கரவெட்டி உ.அ.அ. பிரிவு ஆவணி - 1991 1. யா/க/813 | யா/க/83 |
| பருத்தித்துறை உ.அ.அ. பிரிவு மாசி - 1991 1. யா/பரு/1482 | யா/பரு/182 |
| தெல்லிப்பளை உ.அ.அ. பிரிவு ஆவணி - 1991 1. யா/தெ/274 | யா/தெ/270 |

புலிகளின் கப்பலில் இருந்து

# வெடிப்பொருள்கள் தவிர ஏனையவை ஏலத்தில்

சிங்கப்பூரில் இருந்து ஆயுதங்களைக் கொண்டு வந்த போது காரைக்கால் கடற்பிரதேசத்தில் வைத்துக்கைப்பற்றப்பட்ட கப்பலின் பொருள்களில் வெடிமருந்து தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருள்களும் ஏலத்தில் விடப்படும் என்று இந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி கப்பலுடன் கைதான பத்துப் புலிகளும் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்படுவதாகவும்,

கப்பலில் கைப்பற்றப்பட்டசாகோல், பொட்டாசியம் நைதரேற்று, அலுமினியப் பவுடர், சல்பர், காயனிட்டிக்குளோரைட்டு கண்ணி வெடிகள் இரசாயன பகுப்பாய் வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்,

இவை தவிர 8000 இராணுவ சீருடைகள், சப்பாத்துகள், ரான்சிஸ்ரர் றேடியோக்கள், ரெலிவிஷன்கள், பிளாஸ்டிக்சாரிகள், பெற்றோல், டீசல் பகு என்ஜின்கள் வேறு பொருள்களும் இருந்தன என்றும்,

இவையே ஏலத்தில் விற்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரசாயன பொருள்கள் ஏற்றிவர கப்டன் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்கான ஆய்வுகூட இரசாயன பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்குத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது

சமார் மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான இரசாயனப் பொருள்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கிய போதிலும் கப்பலின் கப்டன் அவற்றை ஏற்றி வருவதற்கு மறுப்புத் தெரிவித்து வருவதாகக் கூறப்படுகின்றது. (ஈ)

# உலக அகதிகளில் 75 வீதம் முஸ்லிம்கள்

(நமது நிருபர்)

முழு உலகிலுமுள்ள அகதிகளில், எழுபத்தைந்து சதவிகிதத்தினர் முஸ்லிம்கள் ஆவார். உலகில் இருக்கும் அகதிகளில் ஒரு கோடிப் பேர் ஆப்கானிஸ்தான், எரிட்ரியா, சலிபோனியா, தென் கொரியா, தென் சூடான் போன்ற நாடுகளிலுள்ள காடுகளில் வாழ்கின்றனர் என ஒரு மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கு சமாதான மாநாடு

# வாஷிங்டன் செல்ல இஸ்ரேல் தயக்கம்

(வாஷிங்டன்)

அரபுக்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையிலான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் டிசம்பர் முதல் வாரத்தில் வாஷிங்டனில் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான அழைப்பிதழ்களை அமெரிக்கா தற்போது அனுப்பி வைத்துள்ளது. அமெரிக்காவின் அழைப்பை ஏற்பதாக ஜோர்தான் ஏற்கனவே அறிவித்துள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இந்த அழைப்பை ஏற்பதென முடிவு செய்துள்ளது. ஆனால் இஸ்ரேல் அமைச்சரவையில் சிலர் இத் தீர்மானத்தைக் கண்டனம் செய்துள்ளனர். இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் சைப்பிரசில் அல்லது மத்திய கிழக்கிற்கு அருகேயுள்ள நாடொன்றில் நடாத்தப்பட வேண்டுமென இசுரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

# 41 ம் நாள் நினைவஞ்சலி

மணலாறில் வீரச்சாவடைந்த

லெப்டினன்ட் நீலன்

(மயில்வாகனம் சேதுலிங்கம்)



வீரஜனனம்: 1975.02-13

வீரச்சாவு: 1991-10-16

எல்லைப் புறங்களை அழித்தெடுக்க
கொக்கிலைப்புறம் வழியே புகுவோரை
வெல்லப் போர் தொடுத்த
வல்லவையின் மைந்தனே-
உன்வழியில் நாமும்

பெற்றோர், சகோதரன்,
புது வளவு சகோதரி, மாமன்,
வல்வெட்டித்துறை மாமி, சித்தப்பா,
சின்னம்மா, பேரன், பேர்த்தி

(B/3522)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது